


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 194 25.02.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 194 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

புதன்கிழமை
(25-02-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-13
பிறை: வளர்பிறை
திதி
நவமி பின்னிரவு 3.06 வரை பிறகு தசமி.
நட்சத்திரம்:
ரோகிணி பிற்பகல் 2.08 வரை பிறகு மிருகசீர்ஷம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 – 9.00 மணி
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4 -5 மணி

| | |
|---|---|
| மேஷம் | முயற்சி |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | ஆசை |
| கடகம் | நேர்மை |
| சிம்மம் | நற்செய்தி |
| கன்னி | நன்மை |
| துலாம் | உயர்வு |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | வரவு |
| மகரம் | சிறப்பு |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | உழைப்பு |

# திமுக ஆட்சியில் ஆதிதிராவிட, பழங்குடியின மக்கள் முன்னேற்றம்

## மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை,பிப்.25:**

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆதிதிராவிட-பழங்குடியின இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காக அளித்து வரும் ஊக்கங்களால் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் 12-ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 82 சதவீதம் என்பது 91.85 சதவீதமாகவும், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் 84.55 சதவீதம் என்பது 95.5 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

2024-2025-ம் கல்வியாண்டில் ஐ.ஐ.டி., என்.ஐ.டி., என்.ஐ.எப்.டி. மற்றும் எப்.டி.டி.ஐ. போன்ற தேசியக்கல்வி நிறுவனங்க ளில் 16 பட்டியல் இன மாணவர்கள் இடம்பிடித்தனர். 2025-2026-ம் கல்வியாண்டில் இந்த எண்ணிக்கை 135 மாணவர்கள் என உயர்ந்து மாபெரும் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் பள்ளிகளில் ரூ.456.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் 868 வகுப்பறைகள் கட்டப்பட்டு கூடுதல் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

3-ம் வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.6,604.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் வெளிநாட்டு உயர்கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தில், குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ. 3 லட்சம் என்பது ரூ.8 லட்சமாக உயர்த்தப்பட்டு ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.36 லட்சம் வரை உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் உதவி பெற்று முந்தைய ஆட்சியில் 10 ஆண்டுகளில் 6 மாணவர்கள் மட்டுமே வெளிநாடுகளில் பயின்றனர். திராவிட மாடல் ஆட்சியில் ரூ.75.54 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டு 440 மாணவர்கள் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டுபல்கலைக்கழகம் முதல் பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயிலும் அருமையான வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

முனைவர் பட்ட ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிட பழங்குடியினங்களைச் சேர்ந்த 8,886 ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ.88.86 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

செவிலியர் பட்டயப் படிப்பு உதவித்தொகை 184 பழங்குடியின மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.70,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

52,255 ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு ரூ.409.68 கோடி மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடன்கள் வழங்கப்பட்டுத் தொழில் முகவர்களாக மேம்படுத்தப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அளித்து வரும் ஊக்கம் காரணமாக இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் வாழும் ஆதிதிராவிட பழங்குடியினரில் 43 பேர் தொழில் முனைவர்களாக உயர்ந்து உள்ளனர். அவர்களுக்கு ரூ.60.80 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தில் ரூ.49.35 கோடி மானியம் வழங்கப்பட்டு 1,042 மகளிர் நில உடைமையாளராக மாற்றப்பட்டனர்.

வீடற்ற ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்கு மொத்தம் 3,09,707 இலவச வீட்டுமனை இ-பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில், 8,535 உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.910 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளன. ரூ.117.27 கோடியில் 120 கிராம அறிவு மையங்களும், ரூ.40 கோடியில் 52 அறிவுச் சுடர் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பண்டைய பழங்குடியினர் மற்றும் நரிக்குறவர் சமூகங்களுக்கு ரூ.315.44 கோடி செலவில் 7,255 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பழங்குடியின மாணவர்கள் கற்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கும் வகையில் 117.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 120 கிராம அறிவுசார் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 125.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 126 அறிவு மையங்கள் கட்டப்படுகின்றன.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட பழங்குடியினர் 22,244 பேர்களுக்கு ரூ.287.47கோடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 586 பேருக்குக் கருணை அடிப்படையில் வேலைகள் வழங்கப்பட்டுள்ளன.

தூய்மைப்பணியாளர்களுக்கு 90 சதவீதம் அரசு மானியத்துடன் 1,000 வீடுகள் ரூ.110 கோடி செலவில் வழங்கப்பட்டன. மேலும், 30,000 வீடுகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 15.11.2025 அன்று 870 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் பணியாற்றும் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ. 213.92 கோடி செலவில் மூன்று வேளையும் உணவு வழங்கும் மகத்தான திட்டத்தை நிறைவேற்றி தாயுமானவர் எனப் போற்றப்படுகிறார் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து வகையிலும் ஆதிதிராவிட பழங்குடியின சமூகங்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தி வரும் திட்டங்களால் இந்திய அளவில் தமிழ்நாட்டின் ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் சிறப்பான முறையில் முன்னேற்றம் கண்டு வாழ்க்கையில் உயர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிமுக 3-ம் கட்ட வாக்குறுதி: ‘ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000 கருணைத் தொகை’



**சென்னை,பிப்.25:**

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் கருணைத் தொகை வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 6 வாக்குறுதிகளை அதிமுக மூன்றாம் கட்டமாக வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 2 கட்ட வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று (பிப்.24) 3-ம் கட்ட வாக்குறுதிகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

அந்த வாக்குறுதிகள் குறித்து அதிமுக வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

1. ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விஷம்போல் ஏறி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், சொத்து வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம், குடிநீர் வரி போன்ற பல வரிகளும் உயர்த்தப்பட்டுவிட்டது. இதனால், மக்களின் அன்றாட குடும்பச் சுமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே, மக்களின் சுமையை குறைக்கும் வகையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக 10,000 ரூபாய் வழங்கப்படும்.

2. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாயும்; +2 வரை படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும்.

3. மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை 8,000 ரூபாயில் இருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

4. ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் அன்று வழங்கப்பட்டு வரும் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து 1,000 ரூபாய் வழங்கப்படும்.

5. கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட்டாகவும்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டில் இருந்து 1,400 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

6. நகரப் பகுதிகளில் நடைபாதை ஓரமாக கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதியில் *முதியோர் உள்ளிட்டவர்களுக்கான ஓய்வூதியங்கள் ரூ. 2,000-மாக உயர்வு

*வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி

*வாழ்வாதார உதவியாக, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும்

*ஜல்லிக்கட்டில் உயிரிழந்தால் நிவாரணம்

*சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளாக, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும், ஆகிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்தது நினைவுகூரத்தக்கது.

# மார்ச் 1 திருப்பரங்குன்றத்தில் பிரதமர் மோடி தரிசனம்!



**சென்னை,பிப்.25:**

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிரமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன.

அந்தவகையில் பிரதமர் மோடி கடந்த மாதம் 23 ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முதல் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று பேசியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரசாரத்தை தீவிரப்படுத்தும் வகையில், மதுரையில் வருகிற மார்ச் 1 ஆம் தேதி நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசவுள்ளார்.

இதற்காக வருகின்ற பிப். 28 ஆம் தேதி சென்னைக்கு வரும் பிரதமர் மோடி அன்றிரவு கிண்டி ஆளுநர் மாளிகையில் தங்கவுள்ளார். சென்னையில் பாஜக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து மார்ச் 1 ஆம் தேதி காலை புதுவையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் மோடி, அங்கிருந்து மதுரை விமான நிலையம் செல்கிறார்.

திருப்பரங்குன்றம் கோயிலில் சாமி தரிசனம் செய்தபிறகு மதுரையில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பேசவுள்ளார்.

மேலும், தமிழகத்துக்கு மார்ச் மாதத்தில் மட்டும் பிரதமர் மோடி மூன்று முறை பயணம் மேற்கொள்ளவுள்ளார். மார்ச் 6 ஆம் தேதி வேலூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் மார்ச் 11 ஆம் தேதி திருச்சி மற்றும் தஞ்சையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நான் என்ன தவறு செய்தேன் என்பதை தெரிவித்தால் அரசியலை விட்டே விலக தயார்: ஓ.பன்னீர்செல்வம்

**போடி,பிப்.25:**

போடியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இன்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தான் இறக்கும் வரை மக்களுக்காக உழைத்து தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். மத்திய அரசு நிதியை எதிர்பார்க்காமல் மாநில அரசின் நிதியைக் கொண்டே மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வந்தார். ஆரம்ப கல்வி முதல் முதுநிலை கல்வி வரை இலவசமாக மாணவர்களுக்கு வழங்கினார். பெண்களுக்கு பல்வேறு நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி இன்று வரை மக்கள் மனதில் நிரந்தர இடம் பிடித்துள்ளார்.

2001ம் ஆண்டு கட்சிக்கு சோதனை காலம் ஏற்பட்ட போது என்னை முதலமைச்சராக நியமித்தார். 6 மாத காலம் அவரது வழியில் அடிபிரளாமல் செயல்பட்டு வந்தேன். அதன் பிறகு ஆண்டிபட்டி தொகுதியில் ஜெயலலிதா போட்டியிட்ட நிலையில் எனது பதவியை ராஜினாமா செய்தேன். 2011ம் ஆண்டு மீண்டும் கட்சிக்கு சோதனை ஏற்பட்டபோது என்னையே முதலமைச்சராக அமரவைத்தார். எனக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்தபோதும் அம்மாவின்



ஆணையை ஏற்று முதலமைச்சர் பதவியை ஏற்றேன்.

கட்சியில் பலவித சோதனைகளை சந்தித்து விட்டேன். ஒன்றுபட்டால் மட்டுமே அ.தி.மு.க.வுக்கு வெற்றி என்பதை ஏற்கவில்லை. தற்போது தனிக்கட்சி தொடங்க வேண்டும் என சிலர் தெரிவித்து வருகின்றனர். இப்போது மட்டுமல்ல எப்போதுமே தனிக்கட்சி தொடங்கமாட்டேன். கடந்த 1 ஆண்டுக்கு முன்பே தனிக்கட்சி தொடங்குமாறு என்னிடம் பண்ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்தார். ஆனால் எனக்கு அதில் உடன்பாடு இல்லை என தெரிவித்து விட்டேன். என்னை முழுவதுமாக கட்சியில் இருந்து நீக்கியதற்கு என்ன காரணம் என்பதை தற்போது பொறுப்பில் உள்ளவர்கள் தெரிவிக்க வேண்டும். நான் தவறு செய்தேன் என்று தெரிந்தால் அரசியலை விட்டே விலகத் தயார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ஊட்டி அருகே புலி தாக்கி முதியவர் உயிரிழப்பு

**ஊட்டி,பிப்.25:**

ஊட்டி அருகே உள்ள சின்ன காடிமந்து பகுதியை சேர்ந்தவர் புஷ்தாள் குட்டன்(57). இவர் இன்று காலை அப்பகுதியில் உள்ள வனப்பகுதிக்குள் சென்றதாக தெரிகிறது.

அப்போது அங்கு மறைந்திருந்த புலி, புஷ்தாள் குட்டனை தாக்கியது. இதில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

வனப்பகுதிக்குள் உடலில் காயங்களுடன் கிடந்த அவரது உடலை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் உடனடியாக வனத்துறைக்கு தகவல் கொடுத்தனர். வனத்துறையினர் விரைந்து வந்து உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். இந்த சம்பவம் ஊட்டி சுற்றுவட்டார பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதையடுத்து, காட்டு



விலங்குகளின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்ல வேண்டாம் என்றும், இரவு நேரங்களில் தனியாக நடமாட வேண்டாம் என்றும் வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே புலி தாக்குதலை கண்டித்து அப்பகுதி பொதுமக்கள் சோலூர் சந்திப்பு பகுதியில் சாலைமறியலில் ஈடுபட்டனர்.



## மாசி மாதம் கிருத்திகை வழிபாடு





**திருவண்ணாமலை, பிப்.25:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனாய முருகப்பெருமானுக்கு மாசி மாத கிருத்திகையை முன்னிட்டு மூலவர்க்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, கந்த சஷ்டி பாராயணம் செய்து, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாரதனையும் நடைபெற்றது.

முருகப்பெருமானையும், வள்ளி, தெய்வானையையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கும்பம் இடுதல் விழா




**திருவண்ணாமலை, பிப்.25:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் குளக்கரையில் அமைந்திருக்கும் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு 73 -ஆம் ஆண்டு பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு கடைசி நாளான நேற்று கும்பம் இடுதல் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கும்பம் இடுதல் விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். வெகு சிறப்பாக நடைபெற்றது அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பேரணாம்பட்டு நகர அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெ.,ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா!



**வேலூர்,பிப்.25:** வேலூர் மாவட்டத்தில் பேரணாம்பட்டு நகர அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் மறைந்த ஜெ.,ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழா பேரணாம்பட்டு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு பேரணாம்பட்டு நகர அதிமுக செயலாளர் வழக்கறிஞர் எல். சீனிவாசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். நகர மாவட்ட அதிமுக நிர்வாகிகள் முன்னாள் நகர மன்ற தலைவர் எஸ். சந்திரா சேட்டு, முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் பி. வாசுகி பாண்டியன், எம். தேசமுத்து, துரை, திருமால், வழக்கறிஞர் ஆர் .ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கும், பேருந்தில் அமர்ந்திருந்த பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த விழாவில் எஸ். ஆனந்தன், பிஎம்எஸ் சிவக்குமார், பால்காரர் சேகர், பத்திரிக்கையாளர் ராமு, ராஜாமணி, பன்னு ரவி, எஸ் .வி.மனோகரன் ,போன்மில் கண்ணன் ,கே.கார்த்திக் ராஜா, எம். சி .சந்தர், ஜி .எஸ்.கோபி, ஜி .எஸ்.ஜெகன் உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மானாமதுரையில் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு வீர ஆஞ்சநேயர் கோவிலில் முன்னாள் எம்எல்ஏ குணசேகரன் அன்னதானம் வழங்கினார்



**மானாமதுரை பிப் 25 :** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா 78 வது பிறந்த நாளை முன்னிட்டு பிருந்தாவனம் தெருவில் உள்ள உத்திராதிமடம் நிர்வாகத்தில் உள்ள வீர ஆஞ்சநேயர் கோவிலில் மானாமதுரை அதிமுக ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்எல்ஏ ம.குணசேகரன் பொதுமக்கள் அனைவருக்கும் பொது அன்னதானம் விருந்து வழங்கினார். முன்னதாக ஆஞ்சநேயர்க்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. இதில் திருப்பத்தூர் முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், மானாமதுரை முன்னாள் எம்எல்ஏ நாகராஜன், ஒன்றிய செயலாளர் ஜெயபிரகாஷ், முன்னாள் ஒன்றிய தலைவர் மாரிமுத்து மற்றும் அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## திசையன்விளையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




**திசையன்விளை, பிப்.25:** திசையன்விளையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி உற்சாகமாக நடைபெற்றது. திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் NSS அணி எண் 184 சார்பில் நடைபெற்று வரும் சிறப்பு முகாமின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக வாக்காளர் விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடைபெற்றது. 24-02-2026 அன்று காலை நடைபெற்ற இந்த பேரணி, கீழநந்தன் குளத்தில் தொடங்கி நடுநந்தன் குளம் வழியாக ஆர். சி. நந்தன்குளம் வரை ஒழுங்காக முன்னேறியது.

மாணவர்கள் “வாக்களிப் போம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்”, “ஒரு வாக்கு ஒரு பொறுப்பு”, “18 வயது நிறைவடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளுங்கள்” போன்ற கோஷங்களை எழுப்பி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பேரணியின் போது NSS மாணவர்கள் பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு பலகைகளை ஏந்தி மக்களிடம் வாக்குரிமையின் அவசியத்தை எடுத்துரைத்தனர். பொதுமக்களிடையே இந்த பேரணி நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திசையன்விளை மனோ கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினார். மேலும், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் எஸ். பலவேச கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பேரணியை சிறப்பித்தனர். சமூக பொறுப்புணர்வை ஊட்டும் வகையில் நடைபெற்ற இந்த வாக்காளர் விழிப்புணர்வு பேரணி, NSS சிறப்பு முகாமின் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

## செய்யாறில் அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் பிரம்மோற்சவம் முன்னிட்டு 1008 பால்குட ஊர்வலம்

### செவ்வாடை பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த திரளாக பங்கேற்பு

**செய்யாறு பிப் .25:** செய்யாறு டவுன், காமராஜர் நகர் அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் பிரம்மோற்சவம் முன்னிட்டு நேற்று 1008 பால்குட ஊர்வலம் வெகு விமர்சியாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு டவுன் ,மார்க்கெட் பகுதியில் உள்ள காமராஜர் நகர் பகுதியில் அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் எழுந்தருளியுள்ளது.

இக்கோயிலில் கொடியேற்றத்துடன் துவங்கிய பிரம்மோற்சவ திருவிழா கடந்த இரு தினங்களுக்கு முன் தேர்தலில் கொலகலமாக நடைபெற்றது .நேற்று 1008 பால்குட ஊர்வலம் செய்யாறு ஆற்றங்கரையில் உள்ள ஞான முருகன் கோயில் அருகில் துவங்கி அருள்மிகு வேதபுரீஸ்வரர் கோயிலை சுற்றி காந்தி சாலை வழியாக மார்க்கெட் பகுதி ஸ்ரீஅங்காளம்மன் கோயிலை அடைந்தது.

செவ்வாடை பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த பால் குடத்தை சுமந்து வந்தனர். ஓம் சக்தி பராசக்தி பக்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது. மேள தாளங்கள் முழங்க ஊர்வலத்தை கோயில் விழா குழுவினர் வழிநடத்தி வந்தனர் .பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்த உற்சவர் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரியை பக்தர்கள் வழிபட்டனர். பின்னர் அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா குழுவினர் விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.




செய்யாறு மார்க்கெட் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் பிரம்மோற்சவம் முன்னிட்டு நேற்று செவ்வாடை பக்தர்களின் 1008 பால்குட ஊர்வலம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

## இளையான்குடியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா தூய்மை பணியாளர்களுக்கு முன்னாள் எம்எல்ஏ நாகராஜன் பிரியாணி வழங்கினார்




**சிவகங்கை, பிப் 25:** சிவகங்கைமாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி பேரூராட்சி அலுவலகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்த நாளை முன்னிட்டு பேரூராட்சியில் பணி புரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், உதவியாளர்கள், மஸ்தூர் பணியாளர்கள் ஆகியோர்க்கு மானாமதுரை முன்னாள் எம்எல்ஏ நாகராஜன் பிரியாணி வழங்கினார். அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை பேரூராட்சி கவுன்சிலர் அதிமுக இளையான்குடி பேரூர் செயலாளர் நாகூர் மீரா செய்து இருந்தார்.

## தவனபங்களா புறப்பாடு



ஸ்ரீ பார்த்தசாரதி தவனோத்ஸவம்-2
தவனபங்களா புறப்பாடு
தொடக்கம் இரண்டாந்திருவந்தாதி

## வாடிப்பட்டியில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா




**வாடிப்பட்டி, பிப்.25:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் அ.தி.மு.க சார்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா பேரூர் செயலாளர் அசோக்குமார் ஏற்பாட்டில் கட்சி அலுவலக வளாகத்தில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன் தலைமை தாங்கினார்.

இலக்கிய அணிமாவட்ட இணை செயலாளர் செந்தில்குமார், பேரூர் நிர்வாகிகள் சந்தனத்துரை, முத்துக் கண்ணன், பேரவை இணைச் செயலாளர் ஆர்.எஸ். ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பொன்ராம் வரவேற்றார்.

பேரவை மாநில இணைச்செயலாளர் ராஜேஷ் கண்ணா ஜெயலலிதா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார். இதில் நிர்வாகிகள் ராமராஜ சேகரன், ஜெயச்சந்திரன், பாண்டி, ரங்கராஜ், ராஜேந்திரன், திருப்பதி, பாரத் சங்கு, மோகன், வில்லி, மலைச்சாமி, நாகேந்திரன், சரவணன், மகளிர் அணி செயலாளர் ஜோதி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேல்முருகன் நன்றி கூறினார்.

## ஜெயலலிதா பிறந்தநாள் விழா




**விழுப்புரம், பிப்.25:** விழுப்புரம் மாவட்டம் காணை கிழக்கு ஒன்றியம் கல்யாணம் பூண்டி கிளைக் கழகத்தின் சார்பில் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

கிளைக் கழக செயலாளர் தே.சௌந்தரராஜன் ஜெயலலிதா அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்... பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். கிளைக் கழக அவைத் தலைவர் ஜி.தேவராஜ் நிர்வாகிகள் ராஜவேல் ஜெகநாதன் முகமது யாசிர், ராமச்சந்திரன் மகளிரணி நிர்வாகிகள் இந்திராணி, சரிதா, தனம் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## மாசி மாதம் கிருத்திகை வழிபாடு



**கடலூர், பிப்.25:** கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி ஈஸ்வரன் கோவில் தெருவில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சி உடனுரை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் அமைந்திருக்கும் வள்ளி தேவசேனா சமேத ஆறுமுக பெருமானுக்கு மாசி மாதம் கிருத்திகையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


Vilambaram
GET... SET..... SHOOT
YOUR SALES WITH SOCIAL MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

# கவிதை அரங்கம்!



தித்திக்கும்
உன் நினைவுகளை
சந்திக்கும் போதுதான்
காத்திருக்கும் வலிகள் கூட
காணாமல் போய்
விடுகின்றது
என் கனவுகள்
நீயாக இருக்கும் வரை
என் கவிதைகள்
உன் பெயர் சொல்லும்
அது விதியின் செயல்
அல்ல
நீ செய்த மாய வலை...!

(யாவும் கற்பனை)

வரிகளில்
இல்லாத ரசனை
உன்னிரு விழிகளில்
உணர்ந்தேன்...!

நீ விடைபெறும்
போதெல்லாம்
என்னிடம்
தாவிக்கொள்கின்றது
சிறு குழந்தையாய்
உன் நினைவுகள்...!

# வாழ்க்கை தத்துவம்...



நிம்மதி என்றால்
பிரச்சனை இல்லாமை அல்ல
அதை சமாளிக்கும் திறன்

கடந்ததை நினைத்து கவலைப்படாதே
அது உன்னை வலிமையாக்கிய நினைவு


சின்ன நல்ல செயல்கள் கூட
வாழ்க்கையை
பெரிய அர்த்தமுள்ளதாக்கும்

சில விடைகள்
காலத்துடன் வரும்
அதுவரை வாழ கற்றுக்கொள்

சில நாட்கள் கடினம்
அதனால் வாழ்க்கை அருமை

சில தருணங்கள்
நம்மை நிறுத்தும்
அதுவே வாழ்க்கையின்
திருப்புமுனை

# நடைபாதை நட்சத்திரம்



"கடலூர் பைபாஸ் ரோட்டில் நடை பாதையில் தினமும் படுத்து உறங்கி பகலில் கிழக்கூத்தாடி வித்தை செய்து வயிறு பிழைக்கும் குடும்பம் வீராசாமி உடையது.

தினமும் அருகில் உள்ள பஸ்டாண்டு ரயில்வே ஸ்டேஷன் மற்றும் பொது இடங்களில் கயிற்றில் நடப்பது இரும்பு கம்பியில் புகுந்து வெளியில் வருவது தீ வட்டத்தில் பாய்ந்து வெளிப்படுவது என்று வித்தை காட்டுவது அவர்கள் குடும்பத்தின் தொழில். .

வீராசாமி அவர் மனைவி தனம்
மகன் பட்டி அவன் மனைவி கலா மற்றும் பேரன் குமார் , பேத்தி சரசு இவர்களின் குடும்பம் .

நடை பாதை தான் இவர்கள் வீடு வாசல் வசந்த மாளிகை இப்படி முப்பது ஆண்டுகள் கடந்து விட்டது வாழ்க்கை .

வாழும் வாழ்க்கையை நொந்து கொண்டாலும் சில நாள் வயிறு நிறையும் பல நாள் பட்டினி தான் பதில். இருந்தும் வேறு தொழிலோ படிப்போ எதுவும் தெரியாது முயற்சி செய்ய நேரமோ எண்ணமோ இல்லை .

பட்டியின் மகன் குமார் கொஞ்சம் மாறுபட்டவன் . தினமும் தொழில் முடிந்து ஓய்வு நேரத்தில் பழைய பேப்பர் நோட்டுகளில் கிறுக்குவான் அழகாக படம் வரைவான் .

நெடுநாளாக பார்த்து வந்த ஒரு பெரியவர் ராஜன் குமாரை அழைத்து தினமும் மாலையில் கல்வி அறிவு கொடுத்தார் . அவன் ஆர்வம் ஈடுபாடு பார்த்து அவனை ஒரு பள்ளியில் சேர்த்து விட்டார் .

பள்ளி முடிந்து கல்லூரிக்கும் அவர் உதவி செய்தார் . அவனின் புத்தக மூட்டை கல்வி சம்மந்தமான எல்லாம் ராஜன் வீட்டில் தான் . அவனுக்கு படுக்க படிக்க சாப்பிட உணவு எல்லாம் அவர் தான்.

யாரும் இல்லாத ராஜன் அவர்களுக்கு முழுப் பிடிப்பு குமார் தான் . ராஜன் வயது எழுபது தாண்டியது .

குமார் நன்கு படித்து வேலைக்கு சென்றான். அதற்குள் ராஜன் அவன் அரசாங்க வேலைக்கு செல்ல பயிற்சி கொடுத்து தேர்வு எழுத உதவினார் .

குமார் விரைவில் தேர்வு பெற்று அரசாங்க வேலையில் அமர்ந்தான். ராஜன் தன் சொத்துக்களை விற்று குமார் குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்து சின்ன நடை பாதை சிற்றுண்டி தள்ளுக் கடை ஆரம்பித்து கொடுத்தார் .

தன் சொந்த முயற்சியில் தன் உறவினர் ஒருவரின் மகள் ராணியை குமாருக்கு மணம் முடித்து வைத்தார்.

குமார் - ராணி தம்பதிக்கு ராகுல் என்கிற மகன் பிறந்தான்.
ராஜன் ராகுலை குமாரை விட அதிகம் கவனம் செலுத்தி படிக்க வைத்தார் .

ராஜன் உடல் மோசமாகி படுகையில் விழுந்தார். வீராசாமி குடும்பமும் குமார் குடும்பமும் நன்கு கவனித்து ராஜன் இறுதி காலத்தை ஆசையை நிறைவேற்றி வைத்தனர்.

வீராசாமி குடும்பம் நன்கு தலைநிமிர ஆரம்பித்தது . சரசுக்கு நல்ல இடத்தில் திருமணத்தை முடித்தார் பட்டி .

ராஜன் இறந்ததும் அவர் நினைவாக குமார் மற்றும் வீராசாமி குடும்பம் வருடத்திற்கு இரண்டு நடை பாதை பிள்ளைகளை தத்து எடுத்து கல்வி வசதி செய்து கொடுத்தனர் .

நடை பாதையில் இருந்து உயர்ந்த குமார் தன் மகன் ராகுலை கலெக்டர் ஆக்கி அழகு பார்த்தான். நடைபாதை நட்சத்திரமாக உருவெடுத்த ராகுல் பிற்காலத்தில் தன் பூர்வீகத்தை பற்றி தெரிந்து கொண்டு ஏழை எளியோருக்கு அடிப்படை வசதி உணவு உடை தங்கும் இடம் கல்வி கற்க வழி செய்தான் .

ஒரு நடைபாதை குமார் கல்வி அறிவு பெற்று உயர்ந்திட பல ஆயிரம் நடை பாதை குடும்பம் விடியல் தேட வழி செய்தான் ராகுல் .

எல்லாவற்றிருக்கும் காரணமான தன் தாத்தா ராஜன் போட்டோவை தன் வீட்டிலும் அலுவலத்திலும் மாட்டி வைத்து தினமும் மானசீகமாக பூஜை செய்தான் ராகுல் .... "

**ஆர். சீதாராமன்.**
– சீர்காழி.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான பைத்தியமா இருப்பான் போல!*
*மனைவி: ஏன் என்னாச்சு?*
*கணவன்: நான் ஹேப்பி பொங்கல்னு சொல்றேன்.. அவன் ஹேப்பி இட்லினுட்டு போறான்.*



# தினம் ஒரு சமையல்



## நாட்டுக்கோழி வறுவல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| நாட்டுக்கோழி | -800 கிராம் |
| சின்ன வெங்காயம் | -300 கிராம் |
| இஞ்சி பூண்டு விழுது | -இரண்டு ஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | -ஐந்து |
| கரம் மசாலா | -நான்கு ஸ்பூன் |
| மிளகுத்தூள் | -ஒரு ஸ்பூன் |
| கொத்தமல்லி | -இலைகள் தேவையானஅளவு |
| கருவேப்பிலை | -இரண்டு கொத்து |
| நல்லெண்ணெய் | -ஐந்து ஸ்பூன் |

செய்முறை:



நாட்டு கோழியை சுத்தம் செய்து சுடு தண்ணீரில் மஞ்சள் சேர்த்து கழுவி அதனுடன் காய்ந்த மிளகாய் கால் ஸ்பூன் இஞ்சி பூண்டு விழுது கால் ஸ்பூன் மஞ்சள் தூள் உப்பு சேர்த்து வேக விடவும்.

இஞ்சி மற்றும் பூண்டை இடி கல்லில் வைத்து நன்கு இடித்து அதனை பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு வாணலியில் சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்து சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கி வெங்காயம் நன்கு வதங்கியவுடன் அதில் கரம் மசாலாத்தூள் சேர்த்து நன்கு பிரட்டி எடுக்கவும். நன்கு ஆரிய பிறகு பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளவும்.

.மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து அதில் மூன்று ஸ்பூன் நல்லெண்ணெய் கடுகு கருவேப்பிலை காய்ந்த மிளகாய் மற்றும் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கவும். இதனுடன் இஞ்சி பூண்டு விழுது மற்றும் வேக வைத்த நாட்டு கோழியை சேர்த்து வதக்கவும்.

கோழி வெங்காயம் உடன் சேர்ந்து நன்கு கலந்த பிறகு அரைத்து மசாலா கலவையை சேர்த்து பிரட்டவும். கோழி வேக வைத்த தண்ணீரை சேர்த்து நன்கு வேக விடவும்.

கோழி நன்கு வெந்து தண்ணீர் வற்றியவுடன் மிளகுத்தூள் சேர்த்து தேவையான அளவு கொத்தமல்லி சேர்த்து நன்கு கலந்து ஒரு நிமிடம் வேக வைத்து எடுத்தால் அருமையான சுவையான என் குடும்பத்தாருக்கு மிகவும் பிடித்த நாட்டுக்கோழி வறுவல் தயார்.

# மிளகு பயன்கள்



* வெள்ளை மிளகு செரிமானத்தை எளிதாக்கும். இதிலுள்ள பைப்பரின், செரிமான நொதிகளின் செயல்பாட்டை அதிகரிக்கிறது. இது ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மற்றும் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது.
* மூட்டு வலிக்கான சிகிச்சையில் வெள்ளை மிளகு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. வெள்ளை மிளகை மையாக அரைத்து மூட்டு வலி உள்ள இடங்களில் பற்று போட்டால் மூட்டு வலி குணமாகும்.
* இது தோல் சுருக்கங்களைத் தடுக்கவும், கண்களுக்குக் கீழே உள்ள கருவளையங்களை நீக்கவும், சருமம் தொங்குவதைத் தடுக்கவும், சரும வறட்சியை நீக்கவும், சருமத்தின் உயிர்ச்சக்தியை மீட்டெடுக்கவும் உதவுகிறது.
* வெள்ளை மிளகு அறிவாற்றல், மூளை செயல்பாடுகளை மேம்படுத்தவும், மூளை செல்கள் சிதைவதைத் தடுக்கவும் உதவுகிறது.
* இதில் அதிகமாக காணப்படுகின்ற பைபரின் வலி நிவாரணியாகவும் உள்ளது. இது உடலில் வீக்கத்தைக் குறைத்து, வலியைக் குறைக்கிறது.
* வயிற்றுப்புண் வராமல் தடுக்க வெள்ளை மிளகு பயன்படுகிறது. மேலும் வயிற்றில் பாக்டீரியா உருவாவதை தடுக்கிறது.
* வெள்ளை மிளகு, உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது மற்றும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இது உடலில் நல்ல கொலஸ்ட்ராலை பராமரிக்கவும் உதவுகிறது.
* வெள்ளை மிளகினை தயிருடன் கலந்து உச்சந்தலையில் தடவி, முப்பது நிமிடங்கள் வைத்திருந்த பின்னர் கூந்தலை கழுவ வேண்டும், இவ்வாறு செய்தால் பொடுகு வராமல் தடுக்கலாம். வெள்ளை மிளகு இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதால் முடி வளர்ச்சியும் மேம்படுகிறது.
* வெள்ளை மிளகினை உணவில் சேர்த்துக் கொள்வது உடல் எடையை குறைக்க உதவும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை கரைக்கும் சக்தி வெள்ளை மிளகுக்கு உண்டு.

# சினிமா

# சுந்தர் சி - விஷால் கூட்டணியில் உருவாகும் 'புருஷன்' படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது!



காமெடி கலந்த கமர்ஷியல் படங்களை கொடுப்பதில் தேர்ந்தவர் இயக்குநர் சுந்தர் சி. இவரது இயக்கத்தில் ஹிப் ஹாப் ஆதியின் துடிப்பான இசையில் விஷால் நடிப்பில் கடந்த 2015-ம் ஆண்டு வெளியான படம் 'ஆம்பள'. சந்தானம் காமெடி இப்படத்தின் ஹைலைட்.

இதே பாணியில் சுந்தர் சி- விஷால் கூட்டணியில் எடுக்கப்பட்ட 'மதகஜராஜா' படமும் வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து தற்போது சுந்தர் சி இயக்கத்தில் விஷால் நடிக்கும் புதிய படத்திற்கு 'புருஷன்' என பெயரிடப்பட்டுள்ளது. ஹிப்ஹாப் ஆதி இசையில் உருவாகும் இப்படத்தின் டீசரை கடந்த மாதம் படக்குழு வெளியிட்டது.

டீசரில், மனைவிக்கு பயந்த கணவனாக விஷாலும், கணவனை வீட்டு வேலைகளை செய்யச் சொல்லி மிரட்டி எடுக்கும் மனைவியாக தமன்னாவும், மேலும் இப்படத்தில் யோகி பாபுவும் நடித்து இருந்தனர். தமிழ் மற்றும் தெலுங்கில் உருவாகும் இப்படத்தை அவ்னி சினிமாக்ஸ், பென்ஸ் மீடியா இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு கோபி அமர்நாத் ஒளிப்பதிவு செய்கிறார்.

இந்த நிலையில், 'புருஷன்' படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி உள்ளதாக நடிகர் விஷால் தெரிவித்துள்ளார்.



இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலங்களில் ஒருவர் ரம்யா பாண்டியன். இவர் வெளியிட்ட மொட்டை மாடி போட்டோஷூட் எவ்வளவு பெரிய அளவில் வைரலானது என்பதை ரசிகர்கள் அறிவார்கள். இந்த நிலையில், தற்போது இவர் வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ பாருங்க:

# KHxRK: 'ஆஜா ராஜா' பின்னணி இசைக்கு VIBE செய்த அனிருத் - வைரல் வீடியோ



45 ஆண்டுகளுக்குப் பிறகு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் உலகநாயகன் கமல்ஹாசன் இணைந்து நடிக்கும் மெகா பட்ஜெட் திரைப்படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குவது உறுதியாகியுள்ளது. ரெட் ஜெயண்ட் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ப்ரோமோ வீடியோ சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இந்தப் படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனிருத் இந்தப் படத்திற்கு இசையமைக்க உள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக KHxRK என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

திரைத்துறையில் உச்ச நட்சத்திரங்களான கமல் ஹாசன் மற்றும் ரஜினிகாந்த் ஒரே திரைப்படத்தில் நடிப்பது ரசிகர்கள் மட்டுமின்றி திரைத்துறையிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த ப்ரோமோ வீடியோவில் அனிருத்தின் துள்ளலான ரெட்ரோ இசை அனைவரையும் கவர்ந்தது. இந்நிலையில், இந்த பின்னணி இசையை உருவாக்கின்போது வைப் செய்த வீடியோவை அனிருத் தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

# காலக்கணித அடிப்படையில் கட்டப்பட்ட 7 கோயில்களின் சிறப்பும் வரலாறும்!



காலக்கணித அடிப்படையில் கட்டப்பட்ட கோயில்கள் என்பது இந்திய பாரம்பரியத்தின் மிக முக்கியமான பகுதி. இந்தக் கோயில்கள் ஒரு ஆன்மிகக் கட்டடங்களாக இல்லாமல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கால மாறுபாடுகள் ஆகியவற்றை கணக்கிடும் அறிவியல் மையங்களாகவும் அமைந்துள்ளன அது போன்ற சில கோயில்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.

1. பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர்: இக்கோயில் சூரிய ஒளியின் கோணத்தை வைத்து, தினசரி நேரம் மற்றும் கால மாற்றங்களைக் கணிப்பதற்கான நுண்ணறிவு கணக்கீடுகள் கொண்டது. இக்கோயில் மூலஸ்தானத்தில் சூரிய ஒளி ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் இறங்கி லிங்கத்தை அடையும். இக்கோயில் கோபுர நிழல் தரையில் விழாத பரிணாமக் கணிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வரலாறு: ராஜராஜ சோழன் ஆட்சி (11ம் நூற்றாண்டு) சோழப் பெருமையின் திருவடிக்கல்லு.

2. சிற்றம்பலம் நடராஜர் கோயில், சிதம்பரம்: இந்தக் கோயில் நட்சத்திரக் கணிதம் (Sidereal Astronomy) அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. கோயில் வடிவம் காசி - கதிரவன் - ஆகாயம் என்பவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு. கோயிலின் மீது கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களின் நிலைகள் நேராகத் திட்டமிடப்பட்டுள்ளன. ஆண்டின் குறிப்பிட்ட நாட்களில் சூரியன், நடராஜரின் பாதங்களை நேராகத் தொடும். உத்திராயணம் தொடக்கக் கணிப்பு.

வரலாறு: சித்தர்கள், சைவ மறையோர் போற்றிய திருவரங்கம் - பல்லவர் / சோழர் காலம். வைணவத் தலங்கள் 108ஐ தரிசித்த பலனைத் தரும் ஒரே திருத்தலம்!

3. கோனார்க் சூரியன் கோயில், ஒடிஷா: சூரியன் இயக்கத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கோயில். காலக்கணிதத்தில் இதுவே மிகத் துல்லியமான கட்டடமாக கருதப்படுகிறது. கோயில் சாரதியின் ரத வடிவத்துடன் 24 சக்கரங்கள், ஒவ்வொரு சக்கரமும் 1 மணி நேரத்தைக் குறிக்கிறது. சூரிய ஒளியின் கோணத்தை வைத்து நேரத்தை கணிக்கலாம்.

வரலாறு: 13ம் நூற்றாண்டில் கங்கா வம்ச அரசர் நரசிம்ம தேவரால் கட்டப்பட்டது.

4. ஸ்ரீவைகுண்ட பெருமாள் கோயில், காஞ்சி: இது ஒரு காலக்கணித ரீதியான பண்டைய விஞ்ஞானத் திட்டம். ஆண்டின் குறிப்பிட்ட நாட்களில் மட்டும், சூரிய ஒளி நிழல் மூலஸ்தானத்துக்குள் நுழையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது அயனச்சுழற்சி அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளது.

வரலாறு: பல்லவர் காலக் கட்டடம் (நரசிம்ம வர்மன் காலம்)

5. அங்கோர் வாட், கம்போடியா: சூரியனின் உச்சியில் ஏற்படும் விஷுவல் சாய்வு (Solstice & Equinoxes) ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்பட்டது. கோபுரத்தின் மூலப்புள்ளி, சூரியன் வரும் கோணங்களை வைத்து திட்டமிடப்பட்டது. கோயிலின் வடிவம் உயிர் வாழும் தத்துவமும், சூரிய இயக்கமும் இணைக்கப்பட்டுள்ளது.

வரலாறு: 12ம் நூற்றாண்டு சூரிய வம்சத்தைச் சார்ந்த இரண்டாம் சூர்ய வர்மனால் கட்டப்பட்டது. நினைத்ததை அடைந்த பிறகும் மனதில் தோன்றும் வெறுமைக்கு கீதை சொல்லும் விளக்கம்!

6. காயாரோகணேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்: சந்திரன் மற்றும் சூரிய இயக்கத்தின் அடிப்படையில் வாயில்கள், சுழற்சி மற்றும் நிழல் இயக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியின் தாக்கம் ஒரு மெதுவான சுழற்சி இயக்கம் போல காட்டப்படுகிறது.

7. ஜந்தர் மந்தர், ஜெய்ப்பூர் மற்றும் டெல்லி: நிழல், சூரிய கோண, கிரக இயக்கங்கள், சோதனைகள் போன்ற பல பரிசோதனைக் கருவிகள். தினசரி நேரம், மாதங்கள், அயனங்கள், பஞ்சாங்கக் கணிப்பு போன்றவை மிகத் துல்லியமாக கணிக்கப்படுகிறது.

வரலாறு: 18ம் நூற்றாண்டில் சவாய் ஜெய் சிங் கட்டிய புவிசார் கணித ஆலயம். அதில் உள்ள சுந்தியான் (வளர்பிறை நிழல் அளவுகோல்) மூலம் நாளையும் நேரத்தையும் மிகத் துல்லியமாகக் கணக்கிடலாம்.

இக்கோயில்கள் ஆன்மிகம் மற்றும் அறிவியல் இரண்டும் ஒருங்கிணைந்த சான்றுகளாக அமைகின்றன. பண்டைய இந்தியர் அறிவியல், காலக்கணிதம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றில் மாஸ்டர் என்பதை இந்தக் கோயில்கள் காட்டுகின்றன.


ARUNACHALAM

## தினம் ஒரு தலைவர்கள்

# அஞ்சனா தேவி சவுத்ரி வரலாறு









அஞ்சனா தேவி சவுத்ரி (1897 - 27 ஏப்ரல் 1981) ராஜஸ்தானின் சிகாரைச் சேர்ந்த ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் , எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய சுதந்திர இயக்கத்தின் போது கைது செய்யப்பட்ட ராஜஸ்தானில் இருந்து வந்த முதல் பெண்மணியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார் . சுதந்திர இயக்கம் மற்றும் பெண்கள் அதிகாரமளிப்புக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.

தொழில்

தேவி 1897 ஆம் ஆண்டு ராஜஸ்தானின் சிகாரில் பிறந்தார் . அவர் ஒரு முக்கிய சமூக சீர்திருத்தவாதியும் காலனித்துவ எதிர்ப்பு தேசியவாதியுமான ராம் நாராயண் சவுத்ரியை மணந்தார் , அவர் அவரை அரசியல் மற்றும் தன்னார்வப் பணிகளுக்கு அறிமுகப்படுத்தினார். ராம் நாராயணுடனான அவரது கூட்டு அவரது செயல்பாட்டை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. அவர் பிஜோலியா இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் , அங்கு அவர் 500 பெண்களின் ஊர்வலத்திற்கு தலைமை தாங்கினார். இந்த எதிர்ப்பின் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு பூண்டி மாநிலத்திலிருந்து நாடுகடத்தப்பட்டார்.

அவர் இந்திய தேசிய காங்கிரஸில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார் மற்றும் சட்டமறுப்பு இயக்கத்தில் ஒரு முக்கிய நபராக ஆனார் . 1921 மற்றும் 1924 க்கு இடையில், பெண்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் பாடுபட்டார். 1930 ஆம் ஆண்டில், இயக்கத்தில் பங்கேற்றதற்காக அவர் இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். அவர் ஏப்ரல் 27, 1981 அன்று ராஜஸ்தானின் சிகாரில் காலமானார் .

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை புதன்கிழமை 25.02.2026

# சத்தீஷ்கார்: கண்ணிவெடி தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் படுகாயம்

**ராய்ப்பூர், பிப்.25:**

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்தியபிரதேசம், ஆந்திரா, தெலுங்கானா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது.

நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த மாதம் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இதையடுத்து, நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக என்கவுன்டர் போன்ற அதிரடி நடவடிக்கையை பாதுகாப்புப்படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர். இதனால், ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்து வருகின்றனர். அதேவேளை, பாதுகாப்புப்படையினர், பொதுமக்களை குறிவைத்து நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்கார் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டம் பஸ்டர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, பாதுகாப்புப்படையினர் வனப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர். அப்போது, வனப்பகுதியில் நக்சலைட்டுகள் மண்ணில் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடி திடீரென வெடித்தது. இந்த கண்ணிவெடி தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் படுகாயமடைந்தார்.

இதையடுத்து, அவரை மீட்ட சக பாதுகாப்புப்படை வீரர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முஸ்லிம் பெண்களிடம் கொடுத்த போர்வையைத் திரும்பப் பெற்ற பாஜக தலைவர்

**புதுடெல்லி, பிப்.25:**




ராஜஸ்தானில் பிரதமர் மோடி பிப்.28 அன்று சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்நிலையில் இச்சுற்றுப்பயணத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களை அழைக்க ராஜஸ்தானின் டோங்க் மாவட்டத்தில் உள்ள கரேடா என்ற கிராமத்திற்கு சென்றுள்ளார் பாஜக முன்னாள் எம்.பி. சுக்பீர் சிங் ஜானபுரியா.

பிரதமர் மோடியின் வருகை குறித்து மக்களிடம் பரப்புரை செய்து கொண்டிருந்தபோது, அங்குவந்த பெண்களுக்கு போர்வைகள் வழங்கியுள்ளார். அப்போது ஒரு பெண்ணின் பெயரை கேட்டுள்ளார். அவர் தனது பெயரை சொன்னவுடன் அவர் முஸ்லீம் என தெரியவர அவருக்கு கொடுத்தப் போர்வையை திரும்பப் பெற்றுள்ளார். மேலும் அங்கிருந்த முஸ்லீம் பெண்களுக்கு கொடுத்த அனைத்துப் போர்வைகளும் திரும்ப பெறப்பட்டுள்ளது.

அதற்கு "பிரதமர் நரேந்திர மோடியைத் திட்டுபவர்களுக்கு போர்வை வாங்க உரிமையில்லை" என்றும் "நீங்கள் வருத்தப்பட்டாலும் எனக்குக்கவலையில்லை" என்றும் கூறியுள்ளார். இதுதொடர்பான வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. இது ஒரு அரசுத் திட்டம் அல்ல என்றும், தனது சொந்தப் பணத்தில் செய்யப்படும் தனிப்பட்ட உதவி என்பதால் யாருக்கு வழங்க வேண்டும் என்பதைத் தானே தீர்மானிப்பேன் என்றும் கூறியுள்ளார். இதற்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

பல பெண்கள் மணிக்கணக்காக காத்திருந்தும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஏழை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு போர்வைகளை வழங்கிய பிறகு அவர்களின் பெயரைக் கேட்டு, பின்னர் அவர்களின் மதத்தின் அடிப்படையில் அவற்றை திரும்பப் பெறுவது மனிதாபிமானமற்ற செயல் என பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்..

# ஈரானிய படகில் கடத்தி வந்த ரூ.5 கோடி சிகரெட்டு பறிமுதல்

**புதுடெல்லி, பிப்.25:**

இந்திய கடலோர காவல் படையினர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: குஜராத் அரபிக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் வந்த ஈரானிய படகு சோதனையிடப்பட்டது.

அதில் முறையான ஆவணங்கள் இன்றி கடத்தி வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் பிடிபட்டன. அவற்றின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.5 கோடி. படகில் இருந்த ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பொருட்கள் எங்கு கொண்டு செல்லப்படவிருந்தன என்பது குறித்தும் பாதுகாப்புப் படையினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். கடல் வழியாக நடைபெறும் கடத்தல் மற்றும் ஊடுருவல்களைத் தடுக்க இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படை தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 21 ஆண்டு என்டிஏ ஆட்சியில் பீகார் ஏழ்மையாகியுள்ளது: தேஜஸ்வி குற்றச்சாட்டு

**பாட்னா, பிப்.25:**

பீகார் மாநில சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவரான தேஜஸ்வி யாதவ் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-


மிகக் குறைந்த ஆண்டு வருமானம், அதிகமான வேலைவாய்ப்பின்மை, விளையாட்டு மற்றும் மற்ற துறைகளில் குறை போன்றவற்றால் கடந்த 21 வருட தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பீகார் ஏழ்மையான மாநிலமாக மாறியுள்ளது. முதலீடு, கல்வி மற்றும் சுகாதாரத்தின் நிலையும் மோசமாக உள்ளது.

மாநிலத்தில் தினமும் கூட்டுபாலியல் வன்கொடுமைகள், கடத்தல்கள் மற்றும் கொலைகள் நடந்து வருகின்றன. அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவையில் கேள்விகள் எழுப்பப்படும்போது அதற்கு பதில்களும் இல்லை. பீகாருக்கு சுயநினைவற்ற முதல்வர் இருப்பது துரதிர்ஷ்டம். இந்த ஊழல்வாதிகள் அரசின் கருவூலத்தையே வீணடித்துவிட்டனர், வரும் நாட்களில், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க போதுமான பணம் மாநிலத்தில் இருக்காது.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் பேசினார்.

# கேரளா; தனியார் பள்ளியில் திடீர் தீ விபத்து - 4 பேருந்துகள் நாசம்

**திருவனநதபுரம், பிப்.25:**



கேரள மாநிலம் செங்கோட்டுக்கோணம் மாவட்டத்தில் துண்டத்தில் தனியார் பள்ளி ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த நிலையில், இன்று அதிகாலை பள்ளி வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் திடீரென தீ ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவஇடத்திற்கு விரைந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் எரிந்துகொண்டிருந்த தீயை போராடி அணைத்தனர். இருப்பினும் இந்த பயங்கர தீ விபத்தில் பேருந்துகள் முற்றிலும் எரிந்து எலும்பு கூடானது. அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதுகுறித்துதகவகலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதுசதிச்செயல் என சந்தேகிக்கப்படுவதால் பள்ளியில் உள்ள சிசிடிவி காட்சிகளை போலீசார் ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த தீ விபத்தில் 3 பேருந்துகள் முற்றிலுமாகவும், ஒரு பேருந்து பகுதியளவும் எரிந்து நாசமானது. பள்ளி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 பேருந்துகள் மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்த சம்பவம் அப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# குண்டடிபட்டும் பின்வாங்காத 'டைசன்'.. 3 பயங்கரவாதிகளை சுட்டுக் கொல்ல வீரர்களுக்கு உதவிய ஜீவன்

**ஜம்மு, பிப்.25:**



ஜம்மு காஷ்மீரின் கிஷ்ட்வார் மாவட்டத்தின் சத்ரூ பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் நேற்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

பயங்கரவாதிகள் மறைந்திருக்கும் துல்லியமான இடத்தை கண்டறிய, ராணுவத்தின் பாரா பிரிவைச் சேர்ந்த ஜெர்மன் ஷெப்பர்ட் இன நாயான 'டைசன்' அழைத்துச் செல்லப்பட்டது.

கரடுமுரடான அந்தப் பகுதிக்குள் டைசன் நுழைந்தபோது, பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் டைசனின் காலில் தோட்டா பாய்ந்து பலத்த காயமேற்பட்டது.

காயமடைந்த போதிலும், டைசன் பின்வாங்காமல் தொடர்ந்து முன்னோக்கிச் சென்று பயங்கரவாதிகள் இருக்கும் இடத்தை பாதுகாப்புப் படையினருக்குக் காட்டிக்கொடுத்தது.

டைசன் காட்டிய இடத்தை வைத்து, பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பைச் சேர்ந்த 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தப்பியோடிக் கொண்டிருந்த ஜெய்ஷ் கமாண்டர் சைபுல்லாவும் ஒருவர்.

சம்பவ இடத்திலிருந்து இரண்டு ஏகே-47 துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

காயமடைந்த டைசன் உடனடியாக ஹெலிகாப்டர் மூலம் ராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அதற்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம்பட்டபோதும் டைசனின் செயல் பாராட்டுகளை குவித்து வருகிறது.

# திருப்பதி கோவிலில் தரிசனத்திற்கு வரிசையில் சென்ற பெண் பக்தரை பாம்பு கடித்தது

**திருப்பதி, பிப்.25:**

தெலுங்கானா மாநிலம் பூபால பள்ளியை சேர்ந்தவர் மவுனிகா (வயது 27). இவர் நேற்று முன்தினம் திருப்பதியில் ஏழுமலையானை தரிசிப்பதற்காக வந்தார். ரூ 300 தரிசன டிக்கெட்டில் தரிசனம் செய்வதற்காக வரிசையில் காத்திருந்தார். தரிசனத்திற்கு ஏராளமான பக்தர்கள் வந்ததால் மோனிகா நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியது இருந்தது. அப்போது திடீரென வந்த பாம்பு ஒன்று மவுனிகாவின் காலில் கடித்துவிட்டு சென்றது. பாம்பு கடித்ததால் மவுனிகா அலறி துடித்தார். இதனைக் கண்டு வரிசையில் காத்திருந்த பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக தேவஸ்தான அதிகாரிகள் ஆம்புலன்ஸ் கொண்டு வந்து மவுனிகாவை மீட்டு சிகிச்சைக்காக அஸ்வினி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பதியில் உள்ள ரூயா ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். தற்போது மவுனிகாவின் உடல்நிலை சீராக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர். தரிசனத்திற்கு வரிசையில் சென்ற பெண் பக்தரை பாம்பு கடித்த சம்பவம் பக்தர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

# கோவில் திருவிழாவில் போலீஸ்காரர் மீது சரமாரி தாக்குதல்

**திருவனந்தபுரம், பிப்.25:**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் ஆலுவா நகரில் பிரபலமான சிவன் கோவில் உள்ளது. இந்த கோவில் திருவிழா நடைபெற்றது. கோவில் திருவிழாவையொட்டி போலீசார் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், திருவிழா பாதுகாப்புப்பணியில் செங்கமனட் போலீஸ் நிலையத்தை சேர்ந்த போலீஸ்காரர் ரஞ்சித் நேற்று இரவு ஆலுவா மணப்புரம் மேம்பாலப்பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, பைக்கில் வந்த இருவர் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர். அவர்களை போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தாமல் செல்லும்படி போலீஸ்காரர் ரஞ்சித் கூறியுள்ளார்.

அப்போது, போலீஸ்காரர் ரஞ்சித்திற்கும் பைக்கில் வந்த அந்த இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில் போலீஸ்காரர் ரஞ்சித்தை பைக்கில் வந்த இருவரும் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த சக போலீசார் விரைந்து சென்றுள்ளனர். அதற்குள் ரஞ்சித்தை தாக்கிய இருவரும் அங்கிருந்து பைக்கில் தப்பியோடியுள்ளனர்.

இதையடுத்து, இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், ரஞ்சித் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடிய இருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# பீகாரில் பயங்கரம்: திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அண்ணன்-தம்பி சுட்டுக்கொலை

**பாட்னா, பிப்.25:**

பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள ஷாபூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் மனிஷ் குமார் (27), மஞ்சீத் குமார் (25). அண்ணன்-தம்பியான இருவரும் அதே கிராமத்தில் நடந்த உறவினர் ஒருவரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அப்போது திருமண வரவேற்பு விழாவில் திடீரென உள்ளே புகுந்த அடையாளம் தெரியாத நபர்கள் சகோதரர்கள் இருவரையும் துப்பாக்கியால் சுட்டனர். உடனே மர்மநபர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து இருவரையும் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு அவர்களை பரிசோதித்த டாக்டர்கள் இருவரும் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். சகோதரர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் இருவரும் சொத்து பிரச்சனை தொடர்பான முன்பகை காரணமாக சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கலாம் என்று போலீசார் தெரிவித்துள்ளனர். தப்பி ஓடிய மர்மநபர்கள் குறித்து போலீசார் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீண்டும் விபத்தில் சிக்கிய தேஜஸ் போர் விமானம்.. உயிர்தப்பிய விமானி



**புதுடெல்லி, பிப்.25:**

இந்தியவிமானப்படையில் இடம்பெற்றுள்ள உள்நாட்டுத் தயாரிப்பு போர்விமானமான 'தேஜஸ்' மீண்டும் விபத்தில் சிக்கி உள்ளது. இந்த மாத தொடக்கத்தில் நிகழ்ந்த இந்த விபத்தின் விவரங்கள் தற்போது வெளியாகி உள்ளது.

வழக்கமான பயிற்சியை முடித்துவிட்டு விமான தளத்தில் தரையிறங்க முயன்றபோது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்தின் போது விமானி சாதுர்யமாகச் செயல்பட்டு பாராசூட் மூலம் குதித்ததால் எவ்வித காயமுமின்றி உயிர் தப்பினார். விமானத்தின் AIRFRAME கட்டமைப்பிற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த விமானத்தை இனி பயன்படுத்த முடியாத அளவிற்கு அது சிதைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீப காலங்களில் தேஜஸ் விமானதிற்கு ஏற்பட்ட மூன்றாவது பெரிய விபத்து இதுவாகும் 2024 மார்ச் மாதம், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் அருகே முதல் விபத்து நிகழ்ந்தது. இதில் விமானி பத்திரமாக மீட்கப்பட்டார்.

கடந்த நவம்பர் மாதம், துபாய் விமானக் கண்காட்சியின் போது நிகழ்ந்த தேஜஸ் விமான விபத்தில் விங் கமாண்டர் நமான்ஷ் சியால் உயிரிழந்தார்.

தற்போது நிகழ்ந்துள்ள இந்த விபத்து குறித்து விமானப்படை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த விபத்தைத் தொடர்ந்து, தற்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து தேஜஸ் விமானங்களையும் விரிவான தொழில்நுட்பப் பரிசோதனைக்கு உட்படுத்த விமானப்படை உத்தரவிட்டுள்ளது.

# அஸ்ஸாம் - அருணாசல் இடையே நிறுவப்பட்டது முதல் எல்லைத் தூண்!

**புதுடெல்லி பிப்.25:**



வடகிழக்குமாநிலங்களான அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே முதலாவது எல்லைத் தூண் ஞாயிற்றுக்கிழமை நிறுவப்பட்டது. இது, இரு மாநில எல்லைப்பிரச்னைக்கு தீர்வுகாணும் நம்சாய் பிரகடன அமலாக்கத்தின் குறிப்பிடத்தக்க படிக்கல்லாகும்.

அஸ்ஸாம்-அருணாசல பிரதேசம் இடையே பல்லாண்டுகளாக நிலவும் எல்லைப் பிரச்னைக்கு தீர்வுகாணும்வகையில் கடந்த 2022-இல் நம்சாய் பிரகடனம் கையொப்பமிடப்பட்டது.

அதன்படி, இரு மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கள ஆய்வு, வரலாற்றுரீதியான ஆவணங்கள் ஆய்வு, உள்ளூர் மக்களுடன் கலந்துரையாடல்களின் மூலம் சுமுகமுடிவைஎட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பலனாக, செய்ஜோசா எல்லைப்பகுதியில் இரு மாநிலங்களுக்கும் இடையிலான முதல் எல்லைத் தூண் ஞாயிற்றுக்கிழமை நிறுவப்பட்டது. இரு மாநில அரசு அதிகாரிகள், காவல் துறையினர், சமூகத் தலைவர்கள், கிராமத் தலைவர்கள் முன்னிலையில் இந்தத் தூண் நிறுவப்பட்டது.

இது, எல்லைப் பிரச்னை தீர்வு நடைமுறையில் வரலாற்று மைல்கல் என்று அருணாசலபிரதேச முதல்வர் பெமா காண்டு தெரிவித்தார்.

# இந்திய எல்லை பகுதி அருகே பாக். நோட்டுக்களுடன் கண்டெடுக்கப்பட்ட பலூன்... போலீஸ் விசாரணை



ஜம்மு காஷ்மீர் மாநிலம் அக்னூர் பகுதியில் உள்ள எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே, அமெரிக்க டாலர் மற்றும் பாகிஸ்தான் நோட்டுகள் இணைக்கப்பட்ட இரண்டு பலூன்கள் கண்டெடுக்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த அமெரிக்க டாலர் மற்றும் பாகிஸ்தான் நோட்டுகள் உண்மையானவையா இல்லையா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடந்து வருவதாக ஜம்மு-காஷ்மீர் காவல்துறை தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேசத்தின் ஆக்ராவில் உள்ள விமானப்படை பகுதியில் பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்தின் (PIL) பெயரைக் கொண்ட பலூன் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.




# பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட மருத்துவமனை வார்டு ஊழியர் கைது



**சென்னை, பிப்.25:** பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஸ்டான்லி மருத்துவமனை வார்டு ஊழியர் கைது செய்யப்பட்டார். கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த 55 வயது பெண் ஒருவருக்கு வலது கால் பாதத்தில் அறுவை சிகிச்சை செய்து கட்டுப் போடப்பட்டுள்ளது.

மருத்துவமனை செல்வதில் சிரமம் இருந்ததால், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் வார்டு பாயாக (ஊழியர்) பணி செய்து வரும் கொடுங்கையூரைச் சேர்ந்த சேகர் (58) என்பவர் அப்பெண்ணின் வீட்டுக்கு நேரில் சென்று அவருக்கு காலில் டிரஸ்ஸிங் செய்து வந்தார்.

வழக்கம் போல், கடந்த 21-ம் தேதி மதியம் சேகர் அப்பெண்ணின் காலில் டிரஸ்ஸிங் செய்ய அவரது வீட்டுக்குச் சென்ற போது, வீட்டில் அப்பெண் மற்றும் அவரது பேரன் மட்டும் இருப்பதை அறிந்து, பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக அப்பெண் ஆர்.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் வழக்குப் பதிந்து பாலியல் சீண்டலில் ஈடுபட்ட சேகரை நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# பாலியல் வன்கொடுமை வழக்கில் காரைக்குடி ஜோதிடருக்கு 200 ஆண்டுகள் சிறை தண்டனை



**சிவகங்கை, பிப்.25:** 2 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது தொடர்பான வழக்கில் காரைக்குடி ஜோதிடருக்கு 200 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து சிவகங்கை போக்சோ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மானகிரியைச் சேர்ந்த ஜோதிடர் ராமகிருஷ்ணன்(52). இவர் பரிகார பூஜைகளை செய்து வந்தார். அவரிடம், 2021-ம் ஆண்டு நவம்பரில் ஜோதிடம் பார்க்க வந்த பெண் ஒருவர், தனது 17 வயது மற்றும் 14 வயது உள்ள 2 மகள்கள் சரியாக படிப்பதில்லை என்று கூறியுள்ளார்.

பரிகாரம் செய்தால் இருவரும் நன்றாக படிப்பார்கள் என்று ராம கிருஷ்ணன் கூறியுள்ளார். இதை நம்பி, தனது 2 மகள்களையும் ராமகிருஷ்ணன் வீட்டுக்கு அந்த பெண் அழைத்துச் சென்றார்.

தொடர்ந்து அந்த பெண்ணை ஓர் அறையில் இருக்குமாறு கூறிவிட்டு, பரிகார பூஜை செய்வதாக கூறி மற்றொரு அறைக்கு 2 சிறுமிகளையும் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்தார்.

இதை வெளியில் சென்னால் உங்களது தாய், தந்தை இறந்து விடுவர் என்று கூறி மிரட்டியுள்ளார். இதனால் பயத்தில் சிறுமிகள் வெளியில் சொல்லவில்லை. 2 ஆண்டுகளுக்கு பின்பு 2 சிறுமிகளுக்கும் உடல்நலம் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களை மருத்துவமனையில் அனுமதித்த போது, அவர்களுக்கு பால்வினை நோய் இருப்பது தெரியவந்தது. விசாரணையில், ஜோதிடர் ராம கிருஷ்ணன் தங்களை பாலியல் வன்கொடுமை செய்ததாக சிறுமிகள் கூறினர்.

இதுகுறித்து சிறுமிகளின் தாயார் அளித்த புகாரின் பேரில் திருப்பத்தூர் அனைத்து மகளிர் போலீஸார் போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிந்து ராமகிருஷ்ணனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் 2 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த ஜோதிடர் ராமகிருஷ்ணனுக்கு தலா 100 ஆண்டுகள் வீதம் 200 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை, ரூ.2 லட்சம் அபராதம் விதித்து நீதிபதி கோகுல் முருகன் தீர்ப்பளித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட 2 சிறுமிகளுக்கும் தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க அரசுக்கும் உத்தரவிட்டார். ராமகிருஷ்ணன் மீது இதே போல் மற்றொரு வழக்கு நிலுவையில் உள்ளது. அதற்கான தீர்ப்பு இன்று (பிப்.24) அளிக்கப்படும் என்று நீதிபதி கூறினார்.

இந்த நீதிமன்றத்தில் அதிக பட்ச தண்டனையாக ஒரு குற்றவாளிக்கு 200 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிப்பது இதுவே முதல்முறை. சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ராம கிருஷ்ணன் கடந்த 2023-ம் ஆண்டிலிருந்து மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காருக்குள் பிணமாக கிடந்த புதுமாப்பிள்ளை... போலீசார் விசாரணை

**பேராவூரணி, பிப்.25:** தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகே குருவிக்கரம்பை மடத்துவாசல் பகுதியை சேர்ந்தவர் ராஜன். இவரது மகன் மிதுன்குமார் (வயது 30).

சம்பவத்தன்று காலை மிதுன்குமார் தனது காரில் பேராவூரணி கடைவீதிக்கு உணவு சாப்பிடுவதற்காக வந்துள்ளார். அங்கு ஒரு ஓட்டலின் முன்பு காரை நிறுத்தியவர் காரை விட்டு இறங்காமல் இருந்துள்ளார். அந்த காரின் என்ஜின் நீண்ட நேரமாக இயங்கியபடி இருந்துள்ளது. இதனை கண்டு அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தபோது காருக்குள் மயங்கிய நிலையில் மிதுன்குமார் கிடந்துள்ளார்.

உடனடியாக அவர்கள் மிதுன்குமாரை மீட்டு, பேராவூரணி அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். மிதுன்குமாருக்கு திருமணமாகி ஒரு ஆண்டு ஆகிறது. குழந்தைகள் இல்லை. திடீர் மாரடைப்பு காரணமாக அவர் இறந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில் பேராவூரணி போலீசார் வழக்குப்பதிவு செய்து உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நத்தம் மாரியம்மன் கோயில் மாசிப் பெருந் திருவிழா: 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விரதம்!



**நத்தம், பிப்.25:** நத்தம் மாரியம்மன் கோயில் மாசிப் பெருந் திருவிழாவையொட்டி, 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இன்று காப்பு கட்டி விரதம் தொடங்கினர்.

தென் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கோயில்களில் ஒன்றான நத்தம் மாரியம்மன் கோயில் மாசிப் பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இன்று அதிகாலை பக்தர்கள் உலுப்பகுடி அருகே உள்ள கரந்தமலை கன்னிமார் தீர்த்தம் சென்று அங்கு புனித நீராடி, தீர்த்தக் குடங்களுடன் நத்தத்தில் உள்ள சந்தனக் கருப்பு சுவாமி கோயிலில் வந்து ஒன்று கூடினர்.

மஞ்சள் உடையணிந்து தீர்த்தம் எடுத்து வந்த பக்தர்களை காலை 8.45 மணிக்கு மாரியம்மன் கோயிலுக்கு மேளதாளம் முழங்க, வர்ணக் குடை, தீவட்டி பரிவாரங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

அப்போது பக்தர்கள் தீர்த்தக் குடங்களை தலையில் சுமந்து வர கோவிந்தா கோவிந்தா கோஷம் முழங்க பக்தி பரவசத்துடன் சென்றனர். பின்னர் அங்கு அம்மன் உருவம் பொறித்த மஞ்சள் காப்பு கட்டி 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் 15 நாள் விரதம் தொடங்கினர்.

தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.

இன்றிரவு அம்மன் குளத்திலிருந்து கம்பம் எடுத்து வரப்பட்டு கோயிலில் ஸ்தாபிதம் செய்யப்படும்.விழா நாட்களின் இரவில் பிப்ரவரி 27 ஆம் தேதி மயில் வாகனத்திலும், மார்ச் 3 ஆம் தேதி சிம்ம வாகனத்திலும், 6 ஆம் தேதி அன்ன வாகனத்திலும் சர்வ அலங்காரத்தில் எழுந்தருளி மின்ரதத்தில் நகர்வலம் வரும். அப்போது பக்தர்கள் ஆங்காங்கே திரண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபடுவர்.

மார்ச் 8 ஆம் தேதி பக்தர்கள் பால்குடம் எடுத்தல், 9 ஆம் தேதி அம்மனுக்கு மஞ்சள் திருப்பாவாடை சாட்டுதல் நிகழ்ச்சிகளும் நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக மார்ச் 10 ஆம் தேதி அதிகாலை பக்தர்கள் அக்கினிச் சட்டி எடுத்தல் நிகழ்ச்சியும், காந்திநகர் பொதுமக்களால் கழுகு மரம் ஊன்றும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

# சென்னை கடற்கரை - செங்கல்பட்டு மார்க்கத்தில் 44 ரயில் சேவை 4-வது நாளாக ரத்தானதால் பயணிகள் அவதி

**சென்னை, பிப்.25:** எழும்பூர் ரயில் நிலைய மறு சீரமைப்பு பணியின் ஒரு பகுதியாக, 10, 11 ஆகிய நடைமேடைகளில் நடைமேம்பால அடித்தளப் பணிகள் நடைபெறுகின்றன.

இதனால், கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் பிப் .20-ம் தேதி முதல் ஏப்.5-ம் தேதி வரை 44 மின்சார ரயில்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும், இம் மார்க்கத்தில் இதர மின்சார ரயில் சேவைகள் மாற்றப்பட்டுள்ளன.

கடற்கரையில் இருந்து தாம்பரம், செங்கல்பட்டு நோக்கி இயக்கப்படும் மின்சார ரயில்கள், எழும்பூர் ரயில் நிலைய 5-வது நடைமேடை வழியாகவும்,செங்கல்பட்டு, தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கி இயக்கப்படும் மின்சார ரயில்கள் எழும்பூர் ரயில் நிலைய 6-வது நடைமேடை வழியாகவும் இயக்கப்படுகின்றன.

இவ்வாறு நடைமேடைகள் மாற்றப்பட்டதால், தண்டவாளங்களைப் கடப்பது மற்றும் சிக்னல் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இரு மார்க்கத்திலும் மின்சாரரயில்கள் தாமதமாகின்றன. இதன் காரணமாக, ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் பயணிகள் 45 நிமிடங்கள் வரை காத்திருக்கின்றனர்.

கடந்த 3 நாட்களாகவே பயணிகள் சிரமப்பட்டனர். இந்நிலையில், நேற்று 4-வது நாளாக தாமதத்தால் ரயில் பயணிகள் அவதிப்பட்டனர். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, பொத்தேரி, காட்டாங்குளத்தூர், கூடுவாஞ்சேரி உள்பட பல்வேறு இடங்களில் இருந்து நேற்று காலை சென்னைக்கு வந்த பயணிகள் மிகுந்த சிரமத்தை சந்தித்தனர்.

இது குறித்து, பயணிகள் சிலர் கூறியதாவது: பொத்தேரி நிலையத்தில் இருந்து கடற்கரை நோக்கி செல்லும் மின்சார ரயிலில் இன்று (நேற்று) காலை தாம்பரம் நிலையம் வந்தபிறகு, எந்தவித முன்னறிவிப்பின்றி திடீரென நிறுத்தப்பட்டது.

இதையடுத்து, வேறு ரயிலுக்காக கொஞ்சம் நேரம் காத்திருந்தபோது, செங்கல்பட்டில் இருந்து கடற்கரை நோக்கி செல்லும் மின்சார ரயில் வந்தது. அந்த ரயிலில் கட்டுக்கடங்காதகூட்டம் நிரம்பி வழிந்தது. வேலைக்கு உரிய நேரத்தில் செல்லவேண்டும் என்ற நிலையில், அந்த ரயிலில் நெரிசலுடன் பயணித்தோம்.

இந்த ரயில் சேத்துப்பட்டு வந்த பிறகு, 25 நிமிடம் நிறுத்தப்பட்டது. பொத்தேரியில் இருந்து எழும்பூருக்கு வந்தடைய 2 மணி நேரம்வரை ஆகிவிட்டது. மின்சார ரயில் ஆங்காங்கே நிறுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும். மேலும், பரங்கிமலை - காட்டாங்குளத்தூர் இடையே கூடுதல் மின்சார ரயில் சேவை இயக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: பயணிகள் சிரமத்தை தவிர்க்க, பரங்கிமலை - கூடுவாஞ்சேரி இடையே கூடுதல் மின்சார ரயில் சேவை இயக்க ஆலோசிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, சோதனை அடிப்படையில் கூடுதல் ரயில் சேவை இயக்கப்பட்டது.

புறநகரில் இருந்து இந்த ரயிலில் வரும் மக்கள் பரங்கி மலையில் இறங்கி, அருகில் உள்ள மெட்ரோ ரயில் நிலையம் சென்று, அங்கிருந்து மெட்ரோ ரயில் மூலமாக சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு செல்ல முடியும். இதன்மூலம், காலதாமதத்தை தவிர்க்க முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஜெயலலிதா பிறந்தநாள் விழா




வாடிப்பட்டி, பிப்.25- மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் அ.தி.மு.க சார்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா பேரூர் செயலாளர் அசோக்குமார் ஏற்பாட்டில் கட்சி அலுவலக வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன் தலைமை தாங்கினார். இலக்கிய அணி மாவட்ட இணை செயலாளர் செந்தில்குமார், பேரூர் நிர்வாகிகள் சந்தனத்துரை, முத்துக் கண்ணன், பேரவை இணைச் செயலாளர் ஆர். எஸ். ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பொன்ராம் வரவேற்றார்.

பேரவை மாநில இணைச்செயலாளர் ராஜேஷ் கண்ணா ஜெயலலிதா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார்.

இதில் நிர்வாகிகள் ராமராஜ சேகரன், ஜெயச்சந்திரன், பாண்டி, ரங்கராஜ், ராஜேந்திரன், திருப்பதி, பாரத் சங்கு, மோகன், வில்லி, மலைச்சாமி, நாகேந்திரன், சரவணன், மகளிர் அணி செயலாளர் ஜோதி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேல்முருகன் நன்றி கூறினார்.

# கோடை விடுமுறை விரைவு ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கியது




**சென்னை, பிப்.25:** கோடை விடுமுறையை முன்னிட்டு, விரைவு ரயில்களில் டிக்கெட் முன்பதிவு தொடங்கியுள்ளது. தென் மாவட்ட விரைவு ரயில்களில் பயணிகள் விறுவிறுப்பாக முன்பதிவு செய்கின்றனர்.

நடப்பு கல்வியாண்டில் இறுதி தேர்வுகள் அடுத்த மாதத்தில் தொடங்கி, ஏப்ரல் 2-வது வாரத்தில் முடியும். அதுபோல, கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிந்து பிறகு, கோடை விடுமுறை அறிவிக்கப்பட உள்ளது.

சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் வசிப்போர், சொந்த ஊர்களுக்கும், சிலர் சுற்றுலா இடங்களுக்கும் செல்வார்கள். இந்நிலையில், கோடை விடுமுறையில் ரயிலில் வெளியூர் பயணம் செய்ய திட்டமிட்டுள்ள பொதுமக்கள் முன்பதிவு செய்ய தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: இந்த ஆண்டு கோடை விடுமுறையில் சொந்த ஊர், சுற்றுலா தலங்களுக்கு செல்ல முன்பதிவு செய்கின்றனர். விரைவு ரயில்களில் பயணிக்க, 60 நாட்களுக்கு முன்பாக முன்பதிவு செய்யும் வசதி இருப்பதால், ஐஆர்சிடிசி இணையதளம் மற்றும் ரயில் நிலைய டிக்கெட் கவுன்ட்டர்கள் மூலமாக முன்பதிவு செய்கின்றனர்.

குறிப்பாக, பயணிகள் தேவை அதிகமாக உள்ள தென்மாவட்ட விரைவு ரயில்களில் பயணிகள் ஆர்வமாக முன்பதிவு செய்கின்றனர். சென்னை - திருச்செந்தூர், கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கொல்லம் உட்பட பெரும்பாலான விரைவு ரயில்களில் வரும் ஏப்.24-ம் தேதி பயணத்துக்கு, முன்பதிவு முடிந்துவிட்டது. வந்தே பாரத் உட்பட சில ரயில்களில் மட்டுமே கணிசமாக டிக்கெட்டுகள் உள்ளன.

ஒவ்வொரு நாளும் முன்பதிவு தொடங்கும் போது, பெரும்பாலான டிக்கெட்டுகள் விற்று தீர்ந்து விடுகின்றன. அதிகமாக காத்திருப்பு பட்டியல் உள்ள ரயில்கள், வழித்தடத்தை தேர்வு செய்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இதற்கான, அறிவிப்பு அடுத்த மாதம் இறுதியில் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# அரசு ஸ்டான்லி மருத்துவமனை டீன் அறையில் மேற்கூரை இடிந்து விழுந்து பெண் காயம்




**சென்னை, பிப்.25:** அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ராயபுரம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இங்கு 1,000-க்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தினமும் ஆயிரக்கணக்கானோர் புறநோயாளிகளாக சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர். மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழமையான கட்டிடங்களை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மருத்துவமனை டீன் அறையின் வரவேற்பு பகுதியில் நேற்று மேற்கூரை திடீரென்று பெயர்ந்து விழுந்ததில், அங்கிருந்த டீனின் உதவியாளர் காவியா என்பவர் காயமடைந்தார். உடனே அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

தகவல் அறிந்து வந்த பொதுப்பணித் துறையினர், அந்த பகுதியில் பொதுமக்கள் யாரும் செல்லாமல் இருக்க தடுப்புகளை வைத்து அடைத்தனர். இது தொடர்பாக மருத்துவமனை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு அலுவலர் மீது காரை ஏற்றிக் கொலை: திமுக பிரமுகர் மகன் உட்பட 3 பேர் கைது

**ஓசூர், பிப்.25:** ஓசூர் ராயக்கோட்டை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதிக்கு அருகே உள்ள அன்னை அரவிந்தர் நகரைச் சேர்ந்தவர் சிவமூர்த்தி (54). இவர் ஓசூரில் தொழிலாளர் நலத்துறையில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிவமூர்த்தி வீட்டின் முன்பு இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அப்போது, அவ்வழியாக காரில் வந்த இளைஞர்கள் சிலர் இருசக்கர வாகனங்களை எடுக்கக் கோரி தொடர்ச்சியாக காரில் ஹாரன் அடித்துள்ளனர்.


அப்போது, சிவமூர்த்தி, அவரது மகன் கிருபாகரன், இவரது 6 மாத குழந்தையுடன் மனைவி அம்சவேணி ஆகியோர் வீட்டிலிருந்து வெளியில் வந்து இருசக்கர வாகனத்தை எடுக்க முயன்றனர்.

அப்போது காரை ஓட்டி வந்த இளைஞர்கள், சிவமூர்த்தியின் குடும்பத்தினருடன் தகராறு செய்தனர்.

அதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த இளைஞர் காரை வேகமாக ஓட்டி சிவமூர்த்தி உள்ளிட்ட 4 பேர் மீதும் மோதினர். இதில் 4 பேரும் காயம் அடைந்தனர். அங்கிருந்தவர்கள் 4 பேரையும் மீட்டு, ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். வழியில் சிவமூர்த்தி உயிரிழந்தார்.

இதுதொடர்பாக ஓசூர் நகர போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து, ஓசூர் கும்பாரப்பேட்டையைச் சேர்ந்த முன்னாள் கவுன்சிலரும், தற்போதைய திமுக மாநில செயற்குழு உறுப்பினருமான சீனிவாசனின் மகன் ஆதித்யா(24) அவரது நண்பர்கள் ரித்திக்குமார்(19), ஹரீஸ்(19) ஆகிய 3 பேரையும் கைது செய்தனர். காரையும் பறிமுதல் செய்தனர்.

## ஆதிவராகர் மாசி மகம் உற்சவம்




திருக்குடந்தை ஸ்ரீ ஆதிவராகர் மாசி மகம் உற்சவம் முதல் திருநாள் ஸ்ரீராமன் திருக்கோலம்.

## கும்பகோணம் மாசிமக உத்சவம்



ஸ்ரீசக்கரபாணி ஸ்வாமி கோவில் கும்பகோணம் மாசிமக உத்சவம் கொடியேற்றம்.

## மாசி கெருட சேவை



மதுரை ஸ்ரீ கூடலழகர் மாசி கெருட சேவை.

## எழுத்தாணியின் அரியாசனம் 2025 விருது



தமிழ்நாடு முத்தமிழ் சங்கத்தின் "எழுத்தாணி அரியாசனம் 2025" நிகழ்வின் போது, "தமிழ்ச் செம்மல்" நன்னிலம் இளங்கோவன் அவர்களின் சிறுகதை நூலுக்கு விருது வழங்கப்பட்டது.

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் இடைப்பருவத் தேர்வு வெற்றியாளர்களுக்கு பரிசும் பாராட்டும்



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் படித்து வரும் ஆறு ஏழு எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இடைப்பருவத் தேர்வு பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி தொடங்கி நடைபெற்றது அனைத்து பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெற்ற வெற்றியாளர்களுக்கு மற்றும் செயல்திட்டம் சிறப்பாக செய்த மாணவர்களுக்கும் பரிசுகளும் பாராட்டுகளும் பள்ளியின் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் வழிகாட்டுதலோடு ஆசிரியர் சீனிவாசன் வழங்கி பாராட்டினார் நிகழ்வில் ஆசிரியர்கள் தேன்மொழி, மாலதி, சரண்ராஜ் மற்றும் பிரதீபா பங்கேற்றனர் மாணவர்கள் நிகாஷினி, ரிஷ்வந்த், தன்ஷிகா, தஷ்வினி, சுப ப்ஸ்ரீ, யாழினி, சகிலேஷ் ஆகியோர் பரிசுகள் பெற்றனர் பரிசு பெற்ற மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர்.




திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, நிம்மியம்பட்டு பகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி MLA தலைமையில், மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில்,கழக அமைப்பு செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் R.S.பாரதி EX.MP சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S. சாரதி குமார் BE.,MC ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நகர கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசியல் கார்னர்

## ஆசிரியர் சிறப்பு தகுதித்தேர்வில் எம்பிசி பிரிவினருக்கும் சிறப்பு மதிப்பெண் சலுகை: ராமதாஸ் வலியுறுத்தல்

**சென்னை, பிப்.25:** பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை: பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்காக டிஆர்பி சார்பில் ஜூலை 4, 5 தேதிகளில் சிறப்பு தகுதித்தேர்வு நடத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதில் உள்ள தேர்ச்சி மதிப்பெண் நடைமுறை ஆசிரியர்களிடையே பாகுபாட்டை ஏற்படுத்துவதாக உள்ளது. 2003, 2004 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகள் மூலம் சத்துணவு அமைப்பாளர்கள் ஆசிரியர்களாக பணி ஈர்ப்பு செய்யப்பட்டபோது, அனைவருக்கும் பொதுவான ஒரே குறைந்தபட்ச மதிப்பெண் மட்டுமே தேர்ச்சியாக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் தற்போது ஆசிரியர்களுக்கான சிறப்புத் தகுதித் தேர்வில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 40 சதவீதம் மதிப்பெண்களும் (150-க்கு 60), இதர பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 50 சதவீதம் மதிப்பெண்களும் (150 க்கு 75) சிறப்பு தளர்வாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம்பிசி பிரிவினருக்கு சிறப்பு மதிப்பெண் சலுகை அறிவிக்கப்படவில்லை. அனைத்து துறைகளிலும் இட ஒதுக்கீடு உள்ள நிலையில் ஆசிரியர் தகுதித்தேர்வு மூலம் பணிநிரந்தரம் தொடர்வதில் இப்பிரிவினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பிரிவுக்கும் மற்றொரு பிரிவினருக்கும் 15 மதிப்பெண்கள் வித்தியாசம் உள்ளது. இது தகுதித் தேர்வுதான். பணியில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் 40 சதவீதம் மதிப்பெண்களை (60 மதிப்பெண்கள்) பொதுவானதாக நிர்ணயிக்க வேண்டும் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு சலுகை மதிப்பெண்களை குறைத்து தனியாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "அனைத்து தரப்பு மக்களையும் அரவணைப்பதால் விஜய்க்கு ஆதரவு" - பண்ருட்டி ராமச்சந்திரன் பளிச்

**சென்னை, பிப்.25:** "நடிகர் விஜய் அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்வதால் அவரை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று எம்ஜிஆர் அதிமுக தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தில் எம்ஜிஆர் அதிமுக-வின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதில் அந்தக் கட்சியின் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பொதுச் செயலாளர் ரஞ்சித்குமார் தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன், "தற்போதைய அரசியல் சூழலில் எளிய மக்களைப் பற்றி கவலைப்பட எந்தக் கட்சியும் இல்லை. வசதி படைத்தவர்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ, அவ்வாறே எளிய மக்களும் வாழ வேண்டும் என்பதே எங்களது கொள்கை. பிறக்கும் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். சமவாய்ப்புக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே பேரறிஞர் அண்ணாவின் கனவு.

தமிழக அரசு என்பது தற்போது பெயரளவிலேயே உள்ளது. உண்மையான அதிகாரம் புதுடெல்லியில் தான் இருக்கிறது. தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 234 எம்எல்ஏ-க்கள் நிறைவேற்றும் தீர்மானம் சட்டமாக வேண்டுமெனில், ஓய்வு பெற்ற ஒரு காவல்துறை அதிகாரி (ஆளுநர்) கையெழுத்திட வேண்டியுள்ளது.

ஆளுநர் தான் ராஜாவாக இருக்கிறார். அவருக்கான அமைச்சர்களையே நாம் உருவாக்குகிறோம். முன்பு வெள்ளைக்காரர்கள் ஆண்டார்கள்; இப்போது இந்திக்காரர்கள் ஆள்கிறார்கள். ஒரு திரைப்படத் தணிக்கை விவகாரத்தில் கூட டெல்லி தலையிடுகிறது. 'ஜனநாயகன்' படத்தை இன்றுவரை வெளியிட முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் நமது அடிப்படை அரசியல் உரிமைகளைப் பெறுவதே தலையாய கடமையாகும்" என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், "ஜனநாயகன் படத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளீர்களே, இதை விஜய்க்கான ஆதரவாக எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டதற்கு, "இதனை மத்திய அரசுக்கு எதிரான மனநிலையாகவும் எடுத்துக் கொள்ளலாம்; விஜய்க்கான ஆதரவாகவும் எடுத்துக் கொள்ளலாம்" என்றவர், "நாங்கள் தேர்தலில் போட்டியிட மாட்டோம். தேர்தல் மட்டுமே அரசியல் அல்ல.

அரசியல் கட்சி ஆரம்பித்துள்ளோம். கொள்கையின் அடிப்படையில் ஊழலற்ற அரசியலை, சாதாரண மக்களுக்காக அரசியல் பேசுபவர்களை ஆதரிப்போம். தவெக தலைவர் விஜய் அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்கிறார். அதனால் அவரை ஆதரிக்கிறோம்" என்றார்.

"வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா?" என்று கேட்டதற்கு, "மற்ற கட்சிகளைப் போல் பேரம் பேசமாட்டோம். எங்கள் கட்சியில் உள்ளவர்கள் யாராவது போட்டியிட விரும்பினால் தவெக உடன் கலந்து பேசி அவர்கள் சின்னத்திலேயே போட்டியிட முடிவு செய்வோம்" என்றார்.

## சசிகலா, ஓ.பி.எஸ். NDA கூட்டணிக்கு வருவார்கள் - டி.டி.வி.தினகரன்



**மதுரை, பிப்.25:** மதுரையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகபொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சசிகலாவும், ஓ.பன்னீர்செல்வமும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வருவார்கள்.

* தீய சக்தி தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி என்டிஏ கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வருவார்கள்.

* முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தொண்டர்கள் 99.9 சதவீதம் பேர் தற்போது ஒன்றாக இணைந்துள்ளோம்.

* தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் 40 தொகுதிகள் வரை கேட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சாலையை ஆக்கிரமித்து கட்டியதாக கூறி கோயிலை இடிக்க பிறப்பித்த உத்தரவு ரத்து

**சென்னை, பிப்.25:** சென்னை கொடுங்கையூர் பகுதியில் உள்ள ஒரு கோயில் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக கூறி, 7 நாட்களில் அதை இடிக்க வேண்டுமென மாநகராட்சி நிர்வாகம் தரப்பில் கடந்த ஆண்டு கோயில் நிர்வாகத்துக்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

இதை எதிர்த்து கோயில் நிர்வாகம் தரப்பில் ஜெயா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், 'தங்களது தரப்பில் விளக்கம் அளிக்க எந்தவொரு கால அவகாசமும் அளிக்காமல், கோயில் ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு நடத்தாமல், நேரடியாக கோயிலை இடிக்க வேண்டுமென அதிகாரிகள் உத்தரவிட்டு இருப்பது சட்டவிரோதமானது' என தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள், மாவட்ட ஆட்சியர்,வருவாய் ஆணையரின் பரிந்துரைப்படி சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தும் வகையில், சம்பந்தப்பட்ட கோயில் சாலையை ஆக்கிரமித்து உள்ளதாக குறிப்பிட்டு எந்த களஆய்வும் நடத்தாமல் நேரடியாக கோயிலை 7 நாட்களுக்குள் இடிக்க வேண்டுமென மாநகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டிருப்பது ஏற்புடையதல்ல.

சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிக்க, விளக்கமளிக்க போதிய அவகாசம் வழங்கும் வகையில் விளக்கம் கோரும் நோட்டீஸ் பிறப் பித்து, அதன்பிறகே இறுதி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட கோயில் சாலையோர ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதை மண்டல அளவிலான கண்காணிப்பு குழு ஆய்வு செய்ய வேண்டும்.

அதன்பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் தரப்பில் விளக்கமளிக்க வாய்ப்பளித்து, சட்டப்பூர்வமாக நோட்டீஸ் பிறப்பித்து, அதன்பிறகே கோயிலை இடிப்பது தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும். எனவே, இதுதொடர்பாக மாநகராட்சி நிர்வாகம் தரப்பில் கோயிலை இடிக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுகிறது என உத்தரவிட்டுள்ளனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com